வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள் 03.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இம்மாதம் 5 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை 3 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

புதுடெல்லியில், வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32 ஆவது சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அனைத்து குடிமக்களையும் இல்லம் தோறும் தேசிய கொடி பிரச்சார இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுச்சேரியில் பள்ளி துவங்கும் நேரம் மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

முர்மு (18)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இம்மாதம் 5 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை பிஜீ, நியூசிலாந்து மற்றும் திமோர்-லெஸ்தே ஆகிய 3 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். ஆகஸ்ட் 5 ஆம் தேதி முதல், 7 ஆம் தேதி வரை தனது பயணத்தின் முதல் கட்டமாக திருமதி முர்மு பிஜீ செல்கிறார். பிஜீ அதிபர் திரு கட்டோனிவேர் மற்றும் பிரதமர் திரு சிதிவேணி லவுகாவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை குடியரசு தலைவர் நடத்த உள்ளார். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிஜீ பாராளுமன்றத்தில் உரையாற்றவும், அங்குள்ள புலம் பெயர்ந்த இந்தியர்களுடன் உரையாடவும் திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்ந்து 2 ஆம் கட்டமாக ஆகஸ்ட் 8 மற்றும் 9 ஆம் தேதிகளில் அவர் நியூசிலாந்து செல்கிறார். இந்த பயணத்தின் போது, ஆளுனர் ஜெனரல் சிந்திகுரோ-வுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். மேலும், நியூசிலாந்து

பிரதமர் திரு கிரிஸ்டோபர் லக்சனையும் அவர் சந்திக்கிறார். வெலிங்டனில் நடைபெறும் சர்வதேச கல்வி மாநாட்டிலும், ஆக்லாந்தில் புலம் பெயர்ந்த இந்தியர்களிடமும் அவர் உரையாற்ற உள்ளார். இந்த சுற்றுப் பயணத்தின் நிறைவாக, ஆகஸ்ட் 10 ஆம் தேதி திமோர் லெஸ்தேவிற்கு செல்லும் திருமதி முர்மு அங்கு, அந்நாட்டின் பிரதமர் திரு கே ராலா சனானா குஸ்மாவோ-வை சந்திக்கிறார்.

மோடி 1(18)

புதுடெல்லியில் தேசிய வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32 ஆவது சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைத்தார். நிலையான வேளாண்-உணவு முறைகளை ஒட்டிய மாற்றம் என்ற கருப்பொருளில் இம்மாநாடு நடைபெறுகிறது. பருவநிலை மாற்றம், இயற்கை வளங்கள் குறைதல், அதிகரித்து வரும் உற்பத்தி செலவுகள் போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள நிலையான விவசாயத்திற்கான அவசர தேவையை சமாளிப்பதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது. இம்மாநாட்டில், 75 நாடுகளை சேர்ந்த சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளுடன் விவசாய பிரிவை அரசு வலுப்படுத்தி வருவதாக தெரிவித்தார். மேலும், உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு தீர்வு காணும் வகையில், கூடுதல் உணவு உற்பத்தி நாடாக இந்தியா திகழ்வதாக கூறினார். மத்திய அரசின் பொருளாதார கொள்கையில் வேளாண்மை மையமாக திகழ்கிறது என்று கூறிய பிரதமர், சிறுதானியம், பால், பருப்பு, மற்றும் வாசனைப் பொருட்களை நம் நாடு அதிக அளவில் உற்பத்தி செய்து வருவதாக குறிப்பிட்டார். இயற்கை விவசாயத்தை இந்தியா

மோடி 2(15)

ஊக்குவிப்பதாக கூறிய அவர், மத்திய பட்ஜெட்டில் நீடித்த வேளாண்மைக்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டதாக தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் தட்ப வெப்பங்களை தாங்கும் ஆயிரத்து

தொள்ளாயிரம் பயிர் வகைகள் உருவாக்கப் பட்டிருப்பதாக கூறினார். வேளாண் பிரிவில் டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டை பற்றி எடுத்துரைத்த பிரதமர் வேளாண் நிதியுதவி திட்டத்தின் கீழ், 10 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நிதித் தொகை செலுத்தப்பட்டதாக தெரிவித்தார். விவசாயிகளின் நிலங்களுக்கு சிறப்பு அடையாள குறியீடு வழங்கப்பட இருப்பதாக கூறிய அவர், பண்ணை நடவடிக்கைகளில் டிரோன் பயன்பாடு ஊக்குவிக்கப்படும் என்றார். நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவுகான், நம் நாட்டின் வேளாண் வளர்ச்சி விகிதம் சர்வதேச நாடுகளை விட உயர்ந்து இருப்பதாக குறிப்பிட்டார். ஊட்டச் சத்து குறைப்பாட்டையும், பசியையும் ஒழித்து பருவநிலை தாக்கங்களை எதிர் கொண்டு உற்பத்தியை பெருக்குவதற்கான அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

*ஹர்கர்த் திரங்கா* (10)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அனைத்து குடிமக்களையும் இல்லம் தோறும் தேசிய கொடி பிரச்சார இயக்கத்தை வலுப்படுத்தவும், மீண்டும் அதே உற்சாகத்துடன் அதில் பங்கேற்கவும் வேண்டுகோள் விடுத்தார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ஆகஸ்ட் 9 முதல், 15 ஆம் தேதி வரை, தேசிய கொடியை வீடுகளில் ஏற்றி, அதனுடன் செல்பி எடுத்துக் கொண்டு ஹர்கர் திரங்கா இணையதளத்தில் பதிவேற்றுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் இந்த பிரச்சாரம் கடந்த 2 ஆண்டுகளில் தேசிய இயக்கமாக உருவெடுத்துள்ளது என்றார். தேசத்தின் முழுவதும் உள்ள ஒவ்வொரு இந்தியரிடமும் ஒற்றுமையை மூவர்ண கொடி எழுப்புவதாக கூறியுள்ளார்.

*வருமான வரி* (5)

இந்தியாவில் கடந்த ஜூலை 31 ஆம் தேதி வரை 7 கோடியே 28 லட்சம் பேர் வருமான வரி தாக்கல் செய்துள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. இது, கடந்த ஆண்டை விட 7.5 சதவிகிதம் அதிகமாகும்.

இந்த ஆண்டு 5 கோடிக்கும் மேற்பட்டோர் புதிய வரி விதிப்பு முறையில் வரி தாக்கல் செய்துள்ளதாக அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

உடல்உறுப்பு தான தினம் (19)

14 ஆவது இந்திய உடல் உறுப்பு தான தினம் இன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு புதுடெல்லியில் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்ச்சியில், மூளைச் சாவு அடைந்ததாக அறிவிக்கப் பட்டவர்களின் உறுப்புகளை தானம் செய்த குடும்பத்தினருக்கு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் பாராட்டு தெரிவித்தார். வெற்றிகரமாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நாடு முழுவதும் உறுப்பு தானம் செய்தவர்களையும், மருத்துவர்களையும் அவர் பாராட்டினார். கடந்த 10 ஆண்டுகளில் உடல் உறுப்பு தானம் 4 மடங்கு அதிகரித்து 18 ஆயிரத்து 378 ஆக உயர்ந்துள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில், சுகாதாரத்திற்கான நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி கே பால், உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், நாடு முழுவதும் உள்ள பல்நோக்கு மருத்துவமனைகள் உறுப்பு மாற்று சிகிச்சைக்கான வசதிகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் செயலாளர் திரு அபூர்வ சந்திரா மற்றும் பல மாநிலங்கள் மருத்துவ நிறுவனங்களின் மூத்த மருத்துவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சுற்றுலா (16)

7 ஆவது சர்வதேச விருந்தோம்பல் கண்காட்சி 2024 இன்று நொய்டாவில் தொடங்கியது. தொடக்க விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சார துறை அமைச்சர் திரு கஜேந்திர செகாவத் கூறுகையில், உலகின் 3 ஆவது பெரிய பொருளாதாரமாக இந்திய பொருளாதாரத்தை மாற்றும் ஆற்றல் சுற்றுலாத் துறைக்கு உள்ளது என்றும், இந்தியாவில் சுற்றுலாவிற்கு

ஏராளமான வாய்ப்புகள் உள்ளது என்றும் கூறினார். விவசாயம் மற்றும் சுற்றுலா ஆகியவை நாட்டின் இரண்டு முக்கிய துறைகள் என்று கூறிய அவர், மக்கள் விரும்பும் எதையும், மற்றும் எல்லாவற்றிற்கும் இத்துறைகள் அமைத்து கொடுக்கும் என்றார். 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற சுற்றுலாத் துறை குறிப்பிடத் தக்க பங்கை அளிக்கும் என்று திரு ஷெகாவத் மேலும் கூறினார். நாட்டின் மிகப் பெரிய பொருளாதார உற்பத்தியாளராக சுற்றுலாத் துறை மாற உள்ளது என்று கூறிய அவர், நாடு முழுவதும் புதிய இடங்களை மேம்படுத்துவதில் அரசாங்கம் செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார். பொருளாதார வளர்ச்சியின் முக்கிய அங்கமான சுற்றுலாவை வலுப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

வயநாடு (15)

மோசமான வானிலை, கடினமான நிலப்பரப்பு அமைப்புகளுக்கு மத்தியில் வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய கடற்படை மீட்பு-நிவாரண நடவடிக்கைகளை முழு வீச்சில் தீவிரமாக தொடர்கிறது. நிவாரண முயற்சிகளை அதிகரிக்கவும், பேரழிவால் பாதிக்கப்பட்ட உள்ளூர் மக்களுக்கு ஆதரவு அளிக்கவும், கூடுதல் பணியாளர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். தற்போது 78 கடற்படை வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மாநில அரசின் கோரிக்கைகளை ஏற்று, கூடுதல் கருவிகள் புதுடெல்லியில் இருந்து வரவழைக்கப் பட்டுள்ளதாக ராணுவம் தெரிவித்துள்ளது. உயரிழந்தவர்களின் உடல்களை கண்டறிந்து மீட்பதற்கு இந்த கருவிகள் உதவும் என கூறப்பட்டுள்ளது. இன்று திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய, கேரள மாநில முதலமைச்சர் திரு பினராயி விஜயன், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் 93 நிவாரண மையங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளதாகவும், உயிரிழந்தவர்களில் 148 பேரின் உடல்கள், உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆடி பெருக்கு (7)

தமிழகத்தில் ஆடிப் பெருக்கு விழா இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. காவிரி நதி பாயும் மாவட்டங்களில் வெள்ளம் கரை புரண்டு ஓடும் நிலையில், பொதுமக்கள் அதிகாலையிலேயே ஆற்றின் கரையோரங்களில் கூடி, உழவு தொழில் செழித்தோங்க வழிபாடு செய்தனர். திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், கருட மண்டபம், சிந்தாமணி உள்ளிட்ட காவிரி ஆற்றின் படித் துறைகளில் ஏராளமான பெண்கள் கூடி வழிபாடு நடத்தினர்.

பள்ளி நேரம் (9)

புதுச்சேரியில் சிபிஎஸ்இ பாடத் திட்டத்தின் படி அரசு பள்ளிகளில் தினசரி பாடவேளை 7 லிருந்து 8 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக தினமும் 8 பாட வேளைகளுடன், காலை 9.15 மணி தொடங்கி, மாலை 4.20 மணி வரை பள்ளிகள் இயங்கும் என பள்ளி கல்வித் துறை தெரிவித்துள்ளது. இதில் காலையில் உள்ள 4 பாடவேளைகள் தலா 45 நிமிடங்களுக்கும், மதிய உணவு இடைவேளைக்கு பிறகு நடைபெறும் 4 பாட வேளைகள் தலா 40 நிமிடங்கள் கொண்டதாக இருக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த புதிய நேர அட்டவணை வருகிற 7 ஆம் தேதி முதல் அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்துமாறு பள்ளி தலைவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

உடன்பாடு (17)

5 ஆவது ஆசியான்-இந்தியா சரக்கு வர்த்தக உடன்பாட்டு கூட்டு குழுவின் வர்த்தக ஒப்பந்தத்தை ஆய்வு செய்வதற்கான கூட்டம் இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் உள்ள ஆசியான் செயலகத்தில் கடந்த மாதம் 29 ஆம் தேதி முதல் இம்மாதம் 1 ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு இந்திய வர்த்தக துறையின் கூடுதல் செயலாளர் திரு ராஜேஷ் அகர்வால், மலேஷிய முதலீடு, வர்த்தக தொழில்துறை அமைச்சகத்தின் துணை செயலாளர் திரு மஸ்தூரா அகமத் முஸ்தபா ஆகியோர் கூட்டாக தலைமைத் தாங்கினர். இந்த கூட்டத்தில், 10 ஆசியான் நாடுகள், இந்தியாவை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முதல் 2 சுற்று பேச்சுவார்த்தைகள் கடந்த பிப்ரவரி மாதம்

புதுடெல்லியிலும், மே மாதம் மலேஷியாவின் புத்ரஜெயாவிலும் நடைபெற்றன. மலேஷியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை சேர்ந்த உறுப்பினர்களுடன் 5 ஆவது கூட்டு கூட்டத்தில் விவாதிக்கப்படும் பிரச்சனைகள் குறித்து, பொதுவான புரிதலை வளர்ப்பதற்காக இந்திய தலைவர் இருதரப்பு சந்திப்புகளை நடத்தினார். இந்தியாவின் உலகளாவிய வர்த்தகத்தில் சுமார், 11 சதவிகிதம் பங்கை கொண்ட ஆசியான்-இந்தியாவில் முக்கிய வர்த்தக கூட்டணியாக உள்ளது.

ஒலிம்பிக் (7)

பாரீஸ் ஒலிம்பிக் 2024 தொடரில் மகளிருக்கான தனி நபர் வில் வித்தை பிரிவில் இந்தியாவின் தீபிகா குமாரி காலிறுதி சுற்றுக்கு முன்னேறி உள்ளார். மேலும், துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிருக்கான 25 மீட்டர் இறுதிப் போட்டியில் மனு பாக்கர் நூலிழையில் ஹாட்ரிக் பதக்க வாய்ப்பை தவற விட்டார். நள்ளிரவு 12.18 மணிக்கு நடைபெற உள்ள ஆண்கள் 71 கிலோ எடை பிரிவு காலிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் நிஷாந்த் தேவ், மெக்சிகோவின் மார்கோ வெர்டே வுடன் மோதுகிறார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இம்மாதம் 5 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை 3 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

புதுடெல்லியில், வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32 ஆவது சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அனைத்து குடிமக்களையும் இல்லம் தோறும் தேசிய கொடி பிரச்சார இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுச்சேரியில் பள்ளி துவங்கும் நேரம் மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.